Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 297/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW15** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில்குமரன் |
| Father/Husband Name | : | மாணிக்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.03.2026.**

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது மதுரைமாநகர் விளக்குத்தூண் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.07.2021ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் தேவிப்பட்டினம் காவல் நிலையத்தில் பொறுப்பு காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது தேவிப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண்.228/2021 சட்டபிரிவு 302 இதச வழக்கினை எனது புலன் விசாரணைக்கு 18.07.2021ம் தேதி அதிகாலை 02.15 மணிக்கு எடுத்துக்கொண்டு 02.45 மணிக்கு சம்பவ இடமான பொட்டகவயல் வடக்குத்தெரு மாரியம்மன் கோவில் முன்பாக சென்று சாட்சிகள் மோகன்ராஜ், சேகர் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகசர், வரைபடம் தயார் செய்தேன்.

நான் தயார் செய்த வரைபடம் **அ.சா.ஆ.12**. அதே சாட்சிகள் முன்னிலையில் அதே இடத்தில் கிடந்த முண்டுக்கல், பச்சை வெள்ளைக்கலர் கட்டம்போட்ட இரத்தம்படிந்த துண்டு, இரத்தம்பட்ட சிமிண்ட் கட்டி மற்றும் இரத்தம்படாத சிமிண்ட் கட்டி ஆகியவற்றை அத்தாட்சி தயார் செய்து அதிகாலை 03.45 மணிக்கு கைப்பற்றினேன். இரத்தம் படிந்த சிமெண்ட் தளத்தில் கிடந்த சிமெண்ட் கட்டிகள் **அ.சா.பொ.3.** இரத்தம் படியாத சிமெண்ட் தளத்தில் எடுக்கப்பட்ட சிமெண்ட் கட்டிகள் **அ.சா.பொ.4**. அரக்கு ஊதா கட்டம் போட்ட இரத்தம் தோய்ந்த கைலி ஒன்று **அ.சா.பொ.5**. வெள்ளை வெளிர் ஊதா கருநீலம் கொண்ட டி–சர்ட் ஒன்று இரத்தம் படிந்துள்ளது அது **அ.சா.பொ.6**. இரத்தம் தோய்ந்து எடுக்கப்பட்ட காட்டன் துணி **அ.சா.பொ.7.** பின்பு சாட்சிகள் வேலானி, ஆறுமுகம், மோகன்ராஜ், சேகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அன்றைய தினம் காலை 09.00 மணிக்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு சென்று இறந்துபோன கர்ணன் என்பவரின் பிரேதத்தின் மீது காலை 11.30 மணிவரை பஞ்சாயத்தார்கள் வேலானி, முனியசாமி, செல்லத்துரை, பிரபு ஆகியோர்களை முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.13**. பின்பு சாட்சிகள் பஞ்சவர்ணம், தவஸ்குமார், வேதராஜ், சிங்காரவேல், திருநாவுக்கரசு ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இறந்துபோன கர்ணன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்கு முதல்நிலை காவலர் 1138 விஜயகுமார் என்பவர் மூலம் அரசு மருத்துவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். பின்பு 16.30 மணிக்கு தகவலின் பேரில் நெடுந்துளசி பஸ் நிறுத்தத்தில் வைத்து வழக்கின் எதிரி கருப்பன் மகன் அர்ச்சுணன் என்பவரை காரணம் கூறி கைது செய்து விசாரிக்க எதிரி தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை 16.35 மணிக்கு சாட்சிகள் பொட்டகவயல் குரூப் கிராம நிர்வாக அலுவலர் சரவணன் மற்றும் கிராம உதவியாளர் ஷேக் முக்தா முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.14**. பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவத்தின்போது எதிரி அணிந்திருந்த இரத்தக்கரை படிந்த வெள்ளை நிற அரைக்கை சட்டையை எதிரி கழற்றி ஆஜர் படுத்தியதை 17.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். பின்பு சாட்சிகள் சரவணன், ஷேக் முக்தார்,

ஆம்புலன்ஸ் டிரைவர் முகமது ஹக்கீம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் எதிரி அர்ச்சுணன் என்பவரை இராமநாதபுரம் குற்றவியல் நீதிமன்ற நடுவர் எண்.1 முன்பாக காவல் அடைப்பு அறிக்கையுடன் அனுப்பி வைத்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அனுப்பி வைத்தேன். பின்பு இவ்வழக்கில் எனது விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக தேவிப்பட்டிணம் காவல் ஆய்வாளர் திருமதி. அனிதா அவர்களிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

எதிரி அர்ச்சுணனுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்த விவரம் என் விசாரணையில் தெரியவந்ததா என்றால் தெரியவந்தது. எதிரி அர்ச்சுணனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் யார் என்றால் தெரியாது. அந்த மருத்துவரை நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். அர்ச்சுணனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டு நகலை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். விபத்து பதிவேட்டு அறிக்கையில் எதிரி அர்ச்சுணனுக்கு எப்போது எங்கு வைத்து யாரால் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரிந்த நபர் ஒருவரால் பொட்டகவயல் மாரியம்மன் கோவில் அருகே 17.07.2021ம் தேதி இரவு 8.30 மணியளவில் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. இறந்துபோன கர்ணனுக்கு முதல் சிகிச்சை அளித்து விபத்து பதிவேட்டு அறிக்கை தயார் செய்த மருத்துவரை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. இறந்த கர்ணனுக்கு மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. எதிரிக்கு தயார் செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கையையும் இறந்து போன கர்ணனுக்கு தயாரிக்கப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கையையும் நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோன கர்ணனுக்கு முதல் சிகிச்சை அளித்த விபத்து பதிவேட்டு அறிக்கையை வழங்கிய மருத்துவரை விசாரிக்காததற்கு காரணம் உண்டா என்றால் இல்லை. வழக்கு கோப்பை நான் 19.07.2021ம் தேதி காலை 9.00 மணியளவில் தேவிப்பட்டிணம் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இறந்துபோன கர்ணன் சம்பவத்தின் போது அணிந்திருந்த ஆடைகளை நான் பிரேத விசாரணை அறிக்கையில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். இறந்துபோன கர்ணன் அணிந்திருந்த மேலாடை, கீழாடைகளை நான் எங்கு வைத்து

யார் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன் என்றால் 18.07.2021ம் தேதி தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் வைத்து 18.30மணிக்கு முதல்நிலை காவலர் திரு. விஜயகுமார் பிரேத பரிசோதனைக்கு பிறகு என்னிடம் ஆஜர்படுத்தியதை கைப்பற்றினேன். இறந்துபோன கர்ணன் அணிந்திருந்த ஆடைகளில் எந்தெந்த ஆடைகளை இரசாயன பரிசோதனைக்கு அனுப்பினேன் என்றால் நான் அனுப்பவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் கைப்பற்றிய கல் என்ன வடிவிலான கல் என்றால் செவ்வக வடிவிலான கல். நான் அத்தாட்சியில் செவ்வக வடிவிலான கல் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றியதாக சொல்லப்படும் முண்டுக்கல் புகைப்பிடித்த கருமை நிறத்திலான கல்லா அல்லது புகைபடியாத கல்லா என்றால் ஞாபகமில்லை. நான் தயார் செய்த அத்தாட்சியில் புகைப்பிடித்த கல்லா அல்லது புகைபடியாத கல்லா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் கையொப்பமிட்டுள்ள சாட்சிகளில் எந்தெந்த சாட்சிகளை விசாரணை செய்துள்ளேன் என்றால் வேலானி. வேலானியை தவிர மற்ற சாட்சிகளை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்தததாக சொல்லப்படும் இடமும், நேரமும் ஆட்கள் நடமாட்டம் உள்ள இடம், நேரம் என்றால் சரியல்ல. முதன்முதலில் கிராம நிர்வாக அலுவலருக்கு யார் மூலம், எப்படி தகவல் சொன்னேன் என்றால் போன் மூலம் தகவல் சொல்லி வரவழைத்தேன். கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளரில் யார் முதன்முதலில் எதிரியை கைது செய்த இடத்திற்கு வந்தார்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலர் முதலிலும் பிறகு கிராம உதவியாளரும் வந்தார்கள். எதிரியை கைது செய்து கைது குறிப்பாணை தயார் செய்வதற்கு நான் எடுத்துக்கொண்ட நேரம் எவ்வளவு என்றால் 5 நிமிடங்கள். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதியது என்றால் நான்தான் எழுதினேன். எதிரியை கைது செய்யும் இடத்திற்கு என்னுடன் வந்த காவலர்கள் யார் என்றால் ஞாபகமில்லை. எத்தனை நபர்கள் எதிரியை கைது செய்த இடத்திற்கு சென்றோம் என்றால் ஞாபகமில்லை. வழக்கு சம்பவம் குறித்து காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் வந்தது என்றால் 18.07.2021ம் தேதி இரவு 1.30மணியளவில். இந்த வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்திற்கு புகார் வருவதற்கு முன்பாக தேவிப்பட்டிணம் காவல்நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு காவலர்கள் சென்றதாக எனது

விசாரணையில் தெரிய வந்ததா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் 18.07.2021ம் தேதி. பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் இடமும் நேரமும் இருட்டான இடம் , நேரம் என்றால் சரியல்ல. கோவில் முன்பாக விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. நான் தயார் செய்த பார்வை மகசரில் கோவில் முன்பாக விளக்குகள் எரிந்துகொண்டிருந்ததாக காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் முன்பு உள்ள மாரியம்மன் கோவிலுக்கு எத்தனை வாசல்கள் உள்ளன என்றால் இரண்டு வாசல்கள். தலை வாசல் வடக்கு புறமும், பின்வாசல் கிழக்கு புறமும் இருந்தன. நான் தயார் செய்த வரைபடத்தில் கிழக்கு புறமும், வடக்கு புறமும் வாசல்கள் இருந்ததாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மாரியம்மன் கோவிலை சுற்றி நான்கு புறமும் சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டிருந்ததை நான் வரைபடத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. மாரியம்மன் கோவிலின் எந்த பகுதியில் சம்பவம் நடைபெற்றது என்றால் வடமேற்கு திசையில். நான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததற்கு எடுத்துக்கொண்ட கால அவகாசம் என்றால் சுமார் அரை மணி நேரம். ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்தபிறகு எவ்வளவு நேரம் கழித்து அத்தாட்சி தயார் செய்தேன் என்றால் 10 நிமிடத்தில். ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் கையெழுத்திடும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 17.20 மணி. அத்தாட்சியில் சாட்சிகள் கையெழுத்திடும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 18.00 மணி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இறந்துபோன கர்ணன் மது அருந்தியிருந்ததாக தெரியவந்ததா என்றால் இல்லை. மதுபோதையில் கரடுமுரடான கற்களில் தவறி விழுந்ததினால் ஏற்பட்ட காயத்தினாலும், புஞ்சை காட்டில் உள்ள விறகுகளை வெட்டும்போது ஏற்பட்ட முன்பகையை மனதில் வைத்துக்கொண்டும் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கில் புகார்தாரர் கொடுத்த புகாரை முறையாக விசாரணை செய்யாமல் பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் நான் முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில், விதத்தில், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், வழக்கின் சான்றுபொருட்கள் மற்றும் சான்றாவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து

தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.